# IV ADDITIONAL CITY CIVIL COURT, CHENNAI.

*******

**மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை.**

அசல் வழக்கு எண் :- O.S.5077/2019 தேதி. 10.06.2022

பெயர் : S.P. Meharunnisha
வ.சா.1

தந்தை பெயர் :

வயது :

முகவரி :

1975ம் ஆண்டின் 10வது விதியின் ஏற்பாட்டின்படி நிருபண வாக்குமூலம் செய்யப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>**

**<u>சாட்சி அழைக்கப்பட்டு பிரமாணத்தின் மூலம்</u>**
**<u>1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

இந்த வழக்கில் நான் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்று எனக்கு தெரியும். எனது மார்பகத்தில் கட்டி இருப்பது போன்று இருந்த காரணத்தினால் நான் அதை என் மகளிடம் சொன்னேன். அவர் என்னை 1ம் பிரதிவாதி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். 1ம் பிரதிவாதி மருத்துவமனையை யார் எனக்கு சிபாரிசு செய்தார்கள் என்றால் யாரும் சிபாரிசு செய்யவில்லை. என் மகள் 1ம் பிரதிவாதி மருத்துவமனை பெரிய மருத்துவமனை, நன்றாக சிகிச்சை அளிப்பார்கள் என்று கூறியதால் அந்த மருத்துவமனைக்கு போனோம். 2015ம் ஆண்டு ஜீன் மாதம் முதல் முறையாக எனக்கு மார்பகத்தில் கட்டி இருப்பது தெரியவந்தது. 2015ம் ஆண்டுக்கு முன்பாக மேற்படி மார்பக கட்டிக்காக நான் மருந்து எதுவும் உட்கொள்ளவில்லை. நான் 1ம் பிரதிவாதி மருத்துவமனையில் உள்ள 2ம் பிரதிவாதி மருத்துவரை சந்தித்து சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனது வலது பக்க மார்பகத்தில் கட்டி ஏற்பட்டது. எனக்கு Mammogram

ஆய்வு செய்தார்கள். சிகிச்சைக்கு சென்றவுடன் மேற்படி ஆய்வு செய்யும்படி மருத்துவர் பரிந்துரைத்தார். அதை உடனடியாக செய்தேன். Mammography Test அதே மருத்துவமனையில் செய்தார்கள். எந்த மருத்துவர் செய்தார் என்று நினைவு இல்லை. Mammography Testக்கு எவ்வளவு கட்டணம்

என்று தற்பொழுது நினைவு இல்லை. என் மகள் தான் செலுத்தினார். நான் இந்த வழக்கு பரிகாரம் கேட்டு வேறு எந்த நீதிமன்றத்திலும் வழக்கு தொடரவில்லை.

**<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது</u>**.

Taken **down** by me in the open court and was read over to the witness and accepted by him/her to the correct.

Date:10.06.2022 IV Additional Judge